**பசறை பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 30 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 31 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, பசறை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 50,781 பெறுமதியான கடன்கொடுத்தோர்களிற்கான ஏற்பாடானது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 101,440 தொகையான பொது வைப்பானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெமபர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட ரூபா 71,981 தொகையான முற்கொடுப்பனவானது கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 30,210,573 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 24,104,038 ஆகவிருந்தது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 97,118,363 பெறுமதியான் ஆறு கணக்கு விடயங்களானது தேவையான தகவல் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ / சரிபார்க்கவோ முடிந்திருக்கவில்லை.

#### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபை அதிகாரச்சட்டத்தின் 147 ஆம் பிரிவு | சட்டத்தின் பிரகாரம் 310 பதிவு செய்யப்பட்ட முச்சக்கரவண்டியாளர்களிடமிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் பிரதேசசபை விதிகளின் (நிதி மற்றும் நிர்வாகம்) 217 மற்றும் 218 ஆம் விதிகள் | சபைக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் 2016 ஆம் ஆண்டிற்காக அளவை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள் மற்றும் சேதங்களிற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 189 | 1994 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளில் சபையின் வருமானமாகப் பெறப்பட்ட ரூபா 75,712 பெறுமதியான 03 திருப்பப்பட்ட காசோலைகள் தொடர்பில் உரிய தொகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 371 | 2004 மற்றும் 2006 ஆம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட ரூபா 64,996 தொகையான முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 396 (ஈ) | வழங்கப்பட்டு 06 மாதங்களிற்கு மேலாக கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 21,962 பெறுமதியான 03 காசோலைகள் வருமானத்திற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. |
| (iv) நிதிப்பிரமாணம் 570 | நாளதுவரையாக்கப்பட்ட முறையில் வைப்புப் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 1.6 மற்றும் 4 ஆம் பிரிவு | சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் அவர்களுடைய பதவிகளை வறிதாக்கம் செய்த 2 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 6,835 கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசபைச் சட்டம் மற்றும் 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி | 27 வணிகங்களிற்கான சூழல் அனுமதிப்பத்திரங்கள் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | 2012 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 13,821 பெறுமதி சேர் வரி உள்நாட்ட இறைவரித் திணைக்களத்திற்கு திருப்பப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,444,560

தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,803,722 ஆகவிருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

(அ) 2016 சனவரி 01 இல் உள்ளவாறான மொத்த நிலுவை அறவீடுகளின் செயன்முன்னேற்றமானது 61 சதவீதமாகவிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடவேண்டிய மீதி ரூபா 2,077,632 ஆகவிருந்தது.

(ஆ) பற்றுச்சீட்டிடப்பட்ட பெறுமதியில் மீளாய்வாண்டின் அறவீட்டுச் சதவீதம் 69 சதவீதமாகவிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய மீதி ரூபா 1,077,120 ஆகவிருந்தது.

(இ) பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட விளம்பரங்களிலிருந்தான கட்டணம் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வீதங்கள் மற்றும் வரிகள்

2016 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 1,671 சொத்துக்களின் வரிகள் 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 33,934,965 ஆகவிருந்தது.

### 2.2.4 மிகையறவீட்டுக் கொடுப்பனவு

**ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட மிகையறவீடு**

1985 இன் 01 ஆம் இலக்க அதிகாரசபைச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1958 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆண்டுவரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 12,933 தொகை மிகையறவீடாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3 செயற்பாட்டு செயற்திறமையீன்மைகள்

### 3.1 திண்ம கழிவு முகாமைத்துவம்

ரூபா 5,411,310 ஐ செலவழிப்பதன் மூலம் 2015 ஆம் ஆண்டின் போது மீடும்பிற்றியவில் நிர்மாணிக்கப்பட்ட குப்பை மீள்சுழற்சி கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறமையீன்மைகள்

சபையின் முன்னைய தலைவர் மற்றும் உபதலைவரால் பயன்படுத்தப்பட்ட ரூபா 36,908 பெறுமதியான இரண்டு கைத்தொலைபேசிகள் அலுவலக காலப்பகுதி முடிவடைந்த பின்னர் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடந்த 06 ஆண்டுகளிற்காக மூன்று வங்கி நடைமுறைக் கணக்கில் ரூபா 3,174,421 தொகை விளைவற்றிருந்தது.

## 4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கணக்கீடு

(இ) கடன்படடோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள்